# தண்ணீர் மற்றும் அதன் வகைகள்

கீழ்க்காணும் வகையிலான தண்ணீரைக்கொண்டு சுத்தம் செய்துகொள்ளலாம்.

**1 மழைத் தண்ணீர்** பனிப்பொழிவு, பனிக்கட்டி, கடல் தண்ணீர், கிணறுகளின் தண்ணீர், குழாய் மற்றும் குளங்களின் தண்ணீர் ஆகிய பொதுவாகவே அனைவரும் பயன்படுத்துகின்ற தண்ணீர்.

**2 மனிதர்கள் மற்றும் பிராணிகள் குடித்துவிட்டபின் மிஞ்சிய தண்ணீர்** பிராணிகளில் பன்றி மற்றும் நாய் குடித்துவிட்டபின் மிஞ்சிய தண்ணீர் அசுத்தமானதாகும். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் மாதவிடாய்க் காலங்களில் தண்ணீர் குடித்தபின் இறைத்தூதர் ﷺ அவர்களும் மிஞ்சும் அதே தண்ணீரைக் குடிப்பார்கள் (முஸ்லிம்). மற்றொரு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது, இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கழுதை குடித்துவிட்டு மிஞ்சிய தண்ணீரில் நாங்கள் உழூ செய்துகொள்ளலாமா என்று கேட்கப்பட்டது, அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள், ஆம், அனைத்துப் பிராணிகள் குடித்து மிஞ்சிய தண்ணீரில் நாம் உழூ செய்துகொள்ளலாம் (தாருஃகுத்னி, பைஹஃகி). பூனை குடித்துவிட்டபின் மிஞ்சிய தண்ணீரைப் பற்றி அவர்கள் ﷺ கூறினார்கள், إِنَّهَا لَيْسَتْ بِنَجَسٍ إِنَّهَا مِنَ الطَّوَّافِيْنَ عَلَيْكُمْ وَالطَّوَّافَاتِ இது அசுத்தமானது அல்ல, இது உங்கள் வீடுகளில் வந்துசென்றுகொண்டிருக்கும் பிராணியாகும் (பெரும்பாலான முஹத்திஸீன்கள்).

**3 சுத்தமான பொருட்களான சோப்பு, மாவு ஆகியன சிறிதளவில் கலந்துவிட்ட தண்ணீர்** அது கலந்துவிட்ட காரணத்தினால் அதன் நிறமோ அல்லது சுவையோ மாறிவிடாமல் இருக்குமானால்.

**4 பெருமளவில் ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரில் சிறிதளவு அசுத்தமான பொருள் கலந்துவிட்டாலும்** அதன் நிறமோ அல்லது சுவையோ மாறவில்லையென்றால் அது சுத்தமானதாவே கருதப்படும். உதாரணமாக, ஒரு நதி அல்லது கிணற்றுத் தண்ணீரில்அசுத்தமான பொருள் கலந்துவிடும் நிலையில்.

## சுத்தம் செய்துகொள்ள முடியாத தண்ணீர்

★ தண்ணீரில் எந்த ஒரு சுத்தமான பொருளும் கலந்துவிட்டபின் அதன் சுவையோ அல்லது நிறமோ, வாசனையோ மாறிவிடுமானால்.

★ எந்த தண்ணீரில் ஒரு அசுத்தமான பொருள் கலந்துவிட்டபின் அதன் சுவையோ அல்லது நிறமோ, வாசனையோ மாறிவிடுமானால்.

www.uzaifalahi.com

★ நாய் அல்லது பன்றி குடித்துவிட்டபின் மிஞ்சிய தண்ணீர், இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: إِذَا شَرِبَ الْكَلْبُ فِيْ إِنَاءِ أَحَدِكُمْ فَلْيَغْسِلْهُ سَبْعاً பொருள்: **நாய் உங்களுடைய ஒரு பாத்திரத்தில் வாய் வைத்து (குடித்து) விட்டால் அதனை ஏழு தடவை கழுவவேண்டும்** (புக்ஹாரி, முஸ்லிம்).

**சுத்தம் செய்யவேண்டிய முறை**

1 ஒரு மனிதனுடைய உடல் அல்லது துணியின்மீது அசுத்தம் பட்டுவிடு மேயானால், அதன் அசுத்தம் நீங்கும்வரை முழுவதுமாகக் கழுவிவிட வேண்டும்.

2 தரையின்மீது அசுத்தம் ஏதும் தென்பட்டால், உதாரணமாக, மலம் அல்லது வேறு ஏதும் இருப்பின் அதனை நன்றாக சுத்தம் செய்துவிட வேண்டும். தென்படாத அசுத்தமாக, உதாரணமாக, சிறுநீர் ஆகியன, அது காய்ந்துவிடுமானால் அதுவே போதுமானது, இருப்பினும் அத னைத் தண்ணீர் ஊற்றிச் சுத்தம் செய்துவிடவேண்டும்.

3 ஒரு செத்துவிட்ட பிராணியின் தோலைப் பயன்படுத்துவதானால் அத னைப் பதனிட்டு சுத்தம் செய்துகொள்ளவேண்டும், ஏனெனில். இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், தோல் பதனிடப்படுமானால் அது சுத்தமானதாகும். (புக்ஹாரி, முஸ்லிம்).

4 காலணியின் கீழ் அசுத்தம் ஒட்டிக்கொள்ளுமானால் அதனைத் தரை யின்மீது அல்லது ஏதோ ஒன்றின்மீது உரசி சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

5 ஒரு மனிதனுடைய உடலில் ஒன்று பட்டுவிடுமானால், அது சுத்த மானதா அல்லது அசுத்தமானதா என்று தெரிந்திராத நிலையில், அத னைச் சுத்தமானதாகவே எண்ணிவிடவேண்டும், சந்தேகத்தின் காரண மாகக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும். இருப்பினும், அது அசுத்தமானது என்று உறுதியாக மனதில் படுமானால், அதனைக் கழுவி விடவேண்டும்.

6 ஒரு மனிதனுக்கு அவன்மீது அசுத்தம் பட்டுவிட்டதாக உணர்ந்தாலும், அவனுடைய துணியில் எந்த இடத்தில் பட்டுள்ளது என்று தெரியாம லிருந்தால் அந்தத் துணி முழுவதுமாகவே துவைத்துக்கொள்ளவேண் டும்.



www.uzairfalahi.com

## மல ஜலம் கழித்தல்

ஒவ்வொரு மனிதனுடைய இயற்கையான தேவையாக உள்ள மல ஜலம் கழித்தபின் அதனை இரண்டு வகையில் சுத்தம் செய்துகொள்ளலாம்.

1 **தண்ணீர் பயன்படுத்துவது.** அல்லாஹ் தஆலா திருக்ஃஃகுர்ஆனில் அன்சாரிகளான நபித்தோழர்களைப்பற்றிப் பாராட்டியதன் காரணம் அவர்கள் மல ஜலம் கழித்தபின் தண்ணீரைக்கொண்டு சுத்தம் செய்து கொள்ளும் பழக்கத்தையுடையவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فِيهِ رِجَالٌ يُحِبُّونَ أَن يَتَطَهَّرُواْ وَٱللَّهُ يُحِبُّ ٱلْمُطَّهِّرِينَ ﴿١٠٨﴾ التوبة 108)

*பொருள்: தூய்மையுடன் வாழ விரும்பும் மனிதர்கள் அங்கு உள்ளனர், தூய்மையை மேற்கொள்பவர்களைத்தாம் அல்லாஹ்வும் நேசிக்கிறான் (அத்தவ்பா:108)*

2 **தண்ணீருக்குப் பதிலாக மண் கட்டி, கல்** அல்லது அதற்குப்பதிலாக வேறு எதையும் பயன்படுத்துதல். இரண்டு முறையிலும் சுத்தம் செய்வது சிறந்தது.

* * *

www.uzairfalahi.com